# திருச்சிற்றம்பலம்

## பண்ணிசையில் திருமுறை விண்ணப்பம்

மு.சம்பந்தம், பண்ணிசை ஆசிரியர், பெங்களூர்.
அலைபேசி :97315 47236

ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமான் அருள் பெற்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு மூர்த்தி நாயனார் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் அருளிய திருமுறை திருப்பதிகங்களை நாமும் பண்ணிசையில் பாடி இம்மைக்கும் மறுமைக்கும் நலம் பெறுவோம்.

திருமுறையை தற்காலத்தில் பூசை காலங்களில் பஞ்சபுராண வடிவில்(தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம்) விண்ணப்பித்து வருகிறோம். இதை தவிர உற்சவ காலங்களிலும், திருக்குட முழுக்கு விழா காலங்களிலும் மட்டுமே திருமுறை விண்ணப்பம் செய்து வருகிறோம்.

சைவர்களுக்கு வேதம், ஆகமம் இரண்டும் மிகவும் மிகவும் இன்றியமையாததாகும். ஆகமம் வேதத்திற்கு பாடியம் போன்று விளங்குகிறது.

வேதங்கள் ஸ்வரத்தோடு ஓதப்பட வேண்டும் (ஸ்வரம் என்பது உயர்த்துதல், பதிப்பித்தல், சமப்படுத்துதல், நீட்டுதல்) என இசைப்பதைக் குறிப்பிடுவார்கள். அதே போல திருமுறையும் பண்ணோடு ஒதப்படுதல் வேண்டும். வேதங்கள் ஒரு சிறு மாற்றமும் இன்றி மனனம் செய்து பேணி பாதுகாப்பட்டு வருவது போல் திருமுறைகளையும் பண்ணிசையில் பாடி பேணி பாதுகாக்க வேண்டியது சைவர்களாகிய நம் அனைவரின் கடமையாகும்.

அந்தணர்களின் வேள்வித்தீயில் இடப்படும் அவிற்பாகத்தை ஏற்றுக்கொள்ளும் சிவபெருமான், நாம் உள்ளன்போடு விண்ணப்பிக்கும் திருமுறை விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்கிறார். இதனையே திருமூலர்,

" வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே "
- திருமந்திரம். பாடல் 1793ல் அருளி இருக்கிறார்.

சிவாலங்களில் இறைவனை பூசிக்கும் போது மந்திர இசை, வீணை இசை, வேத அத்தியந்தனம், சாத்திர, தோத்திர பாடல் முதலியன் செய்வித்தல் வேண்டும் என்றும், தீபாராதனைக்கு பின் தமிழ்மொழியின் உறுப்பாகிய இசையை நடனத்தோடு செய்வித்தல் வேண்டும் என்றும், அதன் பின் சமஸ்கிருத மொழியில் பாடப்படும் இசையை பிழையில்லாமல் பாட வேண்டும் என்றும் காமிகாகமம் அர்ச்சனா விதிப்படலம் கூறுகின்றது.

சிவாலயங்களில் பூசைகள், அர்ச்சனைகள் சமஸ்கிருத மந்திரங்களாலும், சுலோகங்களாலும் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். திருமுறை வேதசாரம் என்பதால் அது தமிழ் வேதம் என போற்றப்படுகின்றது. இதனால் சிவாலயங்களில் வேதம் ஓதுவதுடன், திருமுறையும் ஒதப்படுவதும் ஆகம சிறப்பம்சமாய் அமைந்திருக்கிறது.

சிவாலய பூசையின் பொது அம்சங்களான அபிடேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், தௌர்யந்திரிகம் (நிருத்தம், கீதம், வாத்தியம்). பூசையின் முழுமையை பேணுவதில் இந்த ஏழு அம்சங்களும் ஒரே மாதிரியான முக்கியத்துவமுடையவை. இவற்றில் தோத்திரம் என்ற அம்சத்தில் பதி வாக்கு என்ற மகிமைக்குரிய தோத்திரங்கள் அனைத்தும் இடம் பெற வேண்டியவையாகும். இவ்வகையில் வேதம், ஆகமம், திருமுறைகள் இவை மூன்றும் முக்கியமானவையாகும். இதை,

"பக்த ஸ்தோத்திரம் படேத் பச்சாத்
ஆசிஷம் சம்யக் ஆசரேத்"

என்று உத்திர காரணாகமம் – மகாபிஷேகப் படலம் சுலோகம் – 85 கூறுகிறது. இதன் பொருள் "வேதம் ஓதியபின் திருமுறைகளை படிக்க, பின் ஆசீர்வாதம் செய்க" என்பதாகும்.

இதையே,

" நீயோஜ்ய யதாயோக்யம் வேதாத்யனஞ் சரேத்
வேதாங்கஞ்ச புராணஞ்ச ஸ்தல மகாத்மயந் ததா
படந்தி விசேஷேன த்திராவிடைர் வேதகானகை
ஸ்தோத்திரஞ்சாபிகானம் நிருத்தம் சமாசரேத்
நீராஜனம்புன: கிருத்வாபி ஆசீர்வாதம் சமாசரேத்"

என்று காமிகாகமம், சிவானுக்ஞர் படலம் சுலோகம் 329 – 331 கூறுகிறது. இதன் பொருள்

" உரிய முறைப்படி நியோஜித்துவிட்டு வேதாத்யனம் செய்க. வேதங்களையும், சிவபுராணம், தலமான்மியம் என்பவற்றில் உள்ள தோத்திரங்களையும் செய்க. விசேடமாய் பண்ணிசையுடன் தமிழ்வேதத் துதியை செய்க. அதன் பின் கீதம், நிருத்தம் என்பன செய்து ஆசீர்வாதம் செய்க" என்பதாகும்.

மேலும்,

" வேதாத்யயன த்ராவிட வேத பாராயண
நிருத்த கீத வாத்ய ப்ரதஷிண நமஸ்கார
ஆசீர்வாத பஸ்ம ப்ரதான ஜப நைவேத்ய உபசாராந்தம்
உபசார பரம்பரா சித்திர் பூயாத் இதி
பவந்தோ மகாந்தோ ஸ்னுக்ருஹ்ணந்து "

என்று அகோர சிவாச்சாரியார் பத்ததி 25வது ஆசீர்வாத பத்ததி யில் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள்

"வேதமோதுதல், தமிழ் வேத பாராயணம் நிருத்த, கீத வாத்தியம், வலம் வருதல், நமஸ்கரித்தல், ஆசீர்வாதம் செய்தல், விபூதி கொடுத்தல், ஜப நிவேதன் செய்தல் என்று உபசார பரம்பரையின் சித்தியானது ஆகட்டும் என்று மகான்களாயுள்ளவர்கள் அனுக்கிரகிப்பார்களாக" என்பதாகும்.

மேலும், சைவ எல்லப்ப நாவலர் அருளிய அருணாசல புராணம் நூலில்,

"அன்னதுவா யிருக்குதுநீர் காமியத்திலருச்சியு மென்றாலம்புக்கா
ரெத்திலமும் புகழவங்கோர் சிவனுருவமுற்றது கண்டிறைஞ்சி யேத்தி
மன்னியபூமழைபொழிந்து பரவசமாய் மகிழ்ந்தாடி மயனைக்கூவிக்
தன்னிகரில் கோபுரமுமண்டப முமணிமதிலுஞ் சமைப்பித்தார்கள்"

காமிகாகம முறைப்படியே பூசை செய்யுங்கள் என அருளி இருக்கிறார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனாரை திருவெண்ணைநல்லூரில் இறைவன் தடுத்தாட் கொண்டு பித்தா என அடி எடுத்துக் கொடுத்த போது அப்பதிகத்தை நிறைபாணியிலிசை கொள்ள " இந்தளப் " பண்ணிலேயே பாடியருளினார் என்பதை சேக்கிழார் பெருமான்

"முறையால்வரு மதுரத்துடன் மொழி இந்தள முதவிற்
குறையாநிலை மும்மைப்படி கூடுங் கிழமையினால்
நிறைபாணியி லிசைகொள் புணர் நீடும் புகழ் வாக்கால்

இறையான்மகி ழிசைபாடின னெல்லா நிகரில்லான் "

- தடுத்தாட் கொண்ட புராணம் 75

என்று கூறுகிறார்.

காரணாகமத்தில் அருளப்பட்டுள்ள பூசை விதிகளில் சுற்றுப்பலி நடைபெறும் போது பின்வரும் பண்கள் இசைக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

| சந்திகள் | | பண்கள் |
|---|---|---|
| 1. பிரம்மசந்தி | - | பஞ்சமம் |
| 2. இந்திரசந்தி | - | காமேசம் |
| 3. அக்னிசந்தி | - | கொல்லி |
| 4. யமசந்தி | - | கௌசிகம்,,,, |
| 5. நிருத்திசந்தி | - | நட்டபாடை |
| 6. வருணசந்தி | - | சீகாமரம் |
| 7. வாயுசந்தி | - | தக்கேசி |
| 8. குபேரசந்தி | - | சாளரபாணி |
| 9. ஈசானசந்தி | - | தக்கராகம் |

இவ்வட்டவணையில் உள்ள காமேசம், சாரளபாணி பண்கள் தேவாரத்தில் காணப்படவில்லை. சாரளபாணி திருவிசைப்பாவில் காணப்படுகிறது. மேலும், எந்தெந்த பண்கள் எந்தக்காலங்களில் ஓதப்படவேண்டும் என்ற பட்டியலை யாழ் நூலில் விபுலானந்த அடிகள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறார்.

பகற்பண்கள் :-

1. புறநீர்மை 2. காந்தாரம், பியந்தை காந்தாரம் 3. கௌசிகம் 4, இந்தளம் – திருக்குறுந்தொகை, 5. தக்கேசி 6. நட்டராகம், சாதாரி 7. நட்டபாடை (நைவளம்) 8. பழம்பஞ்சுரம் 9. காந்தாரபஞ்சமம் 10. பஞ்சமம்.

இராப்பண்கள் :-

1. தக்கராகம் 2. பழந்தக்கராகம் 3. சீகாமரம் 4. கொல்லி, கொல்லி கௌவாணம், 5. வியாழக்குறிஞ்சி 6. மேகராககுறிஞ்சி 7. குறிஞ்சி 8. அந்தாளிக்குறிஞ்சி.

பொதுப்பண்கள் :-

1. செவ்வழி 2. செந்துருத்தி 3. திருத்தாண்டகம் (தற்காலத்தில் ஹரிகாம்போதியில் பாடப்படுகிறது) 4. யாழ்முறி (இது ஒரு பண் அல்ல யாழ்முறிப்பதிகம். தற்காலத்தில் அடானாவில் பாடப்படுகிறது)

எனவே சைவ ஆகமங்களில், திருமுறைகளில் அருளியபடி திருமுறையை பண்ணிசையில் விண்ணப்பம் செய்து திருவருள் பெறுவோமாக.

திருச்சிற்றம்பலம்